தின கனி காலை நாளிதழ்

மாவட்டம் & தாலுகா வாரியாக நிருபர்கள் புகைப்பட கலைஞர்கள் தேவை

Call : 044-22772060 9443699066



admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தின கனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்






| Vol: 03 | Issue: 245 | 4 Pages | 13.07.2026 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 245 | 4 பக்கங்கள் | 13.07.2026 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**இகழ்ந்தெள்ளாது ஈவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம் உள்ளுள் உவப்பது உடைத்து**

**விளக்கம்:** இகழ்ந்து எள்ளாமல் பொருள் கொடுப்பவரைக் கண்டால், இரப்பவரின் உள்ளம் மகிழ்ந்து உள்ளுக்குள்ளேயே உவகை அடையும் தன்மையுடையதாகும்.

## பீகாருக்கு கடத்த முயன்ற 27 குழந்தை தொழிலாளர்கள் மீட்பு

ராஞ்சி, ஜூலை 13

ஜார்க்கண்ட் மாநிலத்தின் பலாமு மாவட்டக் குழந்தை பாதுகாப்பு பிரிவு அதிகாரிகளுக்கு சிறுவர்கள் சிலர் பீகாருக்கு கடத்தப்படுவதாக ரகசிய தகவல் கிடைத்தது. இதன் அடிப்படையில், துணை போலீஸ் சூப்பிரண்டு தலைமையிலான போலீசார் வாகன சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது, பட்வா பகுதியில் சென்ற ஒரு வாகனத்தில் இருந்து 14 சிறுமிகள் உள்பட மொத்தம் 27 சிறுவர்களை போலீசார் பத்திரமாக மீட்டனர். விசாரணையில், மீட்கப்பட்ட 12 முதல் 16 வயதுடைய சிறுவர்கள் அனைவரும் நெல் நடும் பணிக்காக கூலி தொழிலாளர்களாக பீகாருக்கு கடத்த முயன்றது தெரியவந்தது.

மீட்கப்பட்டசிறுவர், சிறுமிகள்உடனடியாகஅங்குள்ளசிறுவர்சீர்திருத்தக் காப்பகத்திற்கு பாதுகாப்பாக அனுப்பி வைக்கப்பட்டனர். இதுகுறித்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

## திருப்பதி ஏழுமலையான் கோவிலில் ஒரு நாள் உண்டியல் காணிக்கை ரூ.3.93 கோடி



திருமலை, ஜூலை 13

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் தினமும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தந்து சாமி தரிசனம் செய்து வருகின்றனர். விடுமுறை மற்றும் விசேஷ தினங்களில் பக்தர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும். இலவசதரிசனத்தில் பல மணி நேரம் காத்திருந்து பக்தர்கள் சாமி தரிசனம் செய்கின்றனர்.

இந்த நிலையில், திருப்பதி ஏழுமலையான் கோவிலில் நேற்று 92 ஆயிரத்து 017 பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர். 47 ஆயிரத்து 949 பக்தர்கள் முடி காணிக்கை செலுத்தினர். அன்று ஒருநாள் பக்தர்கள் செலுத்திய உண்டியல் காணிக்கை ரூ.3 கோடியே 93 லட்சம் ஆகும். மேலும், லட்டு விற்பனை 4.63 லட்சமாகவும், அன்னபிரசாதம் பெற்ற பக்தர்கள் எண்ணிக்கை 3.23 லட்சமாகவும் பதிவாகியுள்ளது. மருத்துவ சேவைகளை 4,032 பக்தர்கள் பயன்படுத்தியுள்ளனர்.

பக்தர்கள் கூட்டநிலை காரணமாக, சிலாதோரணம் வரை வெளிப்புற வரிசையில் பக்தர்கள் காத்திருக்கின்றனர். எஸ்.எஸ்.டி.டோக்கன் இல்லாத சர்வதரிசனத்திற்கு சுமார் 24 மணி நேரம் காத்திருக்க வேண்டியுள்ளது.

## கேரளா: 36 ஆண்டுகளுக்கு முன் துப்பாக்கி முனையில் கொள்ளை... 71 வயதில் முதியவர் கைது



கோழிக்கோடு ஜூலை 13

கேரளாவில் 36 ஆண்டுகளுக்கு முன் துப்பாக்கி முனையில் பஸ் டிக்கெட் பணம் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவத்தில் 71 வயதில் முதியவர் கைது செய்யப்பட்டார்.

கேரளாவில் திருவம்பாடி மற்றும் கூம்பரா பகுதிக்கு இடையே அரசு போக்குவரத்துக்கழகம் சார்பில் பஸ் சேவை செயல்பட்டு வருகிறது. 1990ம் ஆண்டில் இதுபோன்று பஸ் சேவையின்போது, திருவம்பாடிக்கு பஸ் வந்து சேர்ந்தபோது, நபர் ஒருவர் துப்பாக்கி முனையில் பஸ் டிக்கெட் பணம் எல்லாவற்றையும் கொள்ளையடித்துவிட்டு தப்பினார்.

அதன்பின்னர் அந்த வழக்கில் முன்னேற்றம் எதுவும் இல்லை. கேரளாவின் மலப்புரம் மாவட்டத்தின் அரிக்கோடு பகுதியை சேர்ந்த வி.கே. ஜோஸ் என்பவர்தான் இந்த சம்பவத்தில் ஈடுபட்டவர் என அடையாளம் காணப்பட்டார். கோர்ட்டு, அவரை கைது செய்ய வாரண்ட் பிறப்பித்தது.

இந்த சம்பவத்திற்கு பின்னர், கர்நாடகாவின் மைசூரு நகரில் நரசிம்மராஜா பகுதியில், சிவக்குமார் என்ற பெயரில் வாழ்ந்து வந்துள்ளார். கர்நாடகாவிலேயே திருமணம் முடித்து, குடும்பத்துடன் வசித்து வந்துள்ளார்.

இந்த நிலையில், 36 ஆண்டுகள் கடந்த பின்னர் மைசூரு நகரில் வைத்து அவர் கைது செய்யப்பட்டு உள்ளார். அவருக்கு தற்போது வயது 71. மனைவியுடன் ஏற்பட்ட தகராறு தொடர்பாக, போலீசார் அவருடைய வீட்டில் சோதனை போட்டனர். அப்போது கைத்துப்பாக்கி ஒன்றை கைப்பற்றினர்.

அதற்கான ஆவணங்களை பறிமுதல் செய்து விசாரித்ததில், கேரளாவில் 36 ஆண்டுகளுக்கு முன் துப்பாக்கி முனையில் நடந்த கொள்ளை வழக்கில் இவருக்கு உள்ள தொடர்பு தெரியவந்தது. இதனை தொடர்ந்து, திருவம்பாடி போலீசார், மைசூருக்கு சென்று 71 வயது முதியவரான ஜோசை கைது செய்தனர். இதனை போலீசார் இன்று தெரிவித்தனர். தொடர்ந்து அவரிடம் விசாரணை நடந்து வருகிறது.

# "2031ல் மற்றுமொரு ஆட்சி மாற்றம் நிச்சயம் உருவாகும்" அண்ணாமலை பேச்சு



பொள்ளாச்சி

"2031ல் தமிழக மக்கள் முன்பு நம்முடைய அரசியல் கட்சி நிற்கும். 39 வயதுக்கு கீழே உள்ளவர்கள் 2026ல் தமிழகத்தில் ஒரு ஆட்சி மாற்றத்தை உருவாக்கினார்கள். அவர்கள் 2031ல் மற்றுமொரு ஆட்சி மாற்றத்தை நிச்சயம் உருவாக்குவார்கள்" என 'வீ த லீடர்ஸ்' இயக்கத்தின் தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

பொள்ளாச்சியில் நடைபெற்ற 'போதைப்பொருள் இல்லாத தமிழகம்' மாநாட்டில் பேசிய அண்ணாமலை, "இது என்னுடைய குடும்ப அமைப்பு கிடையாது. எந்த அழைப்பும் இல்லாமல் இத்தனை பேர் வந்துள்ளீர்கள் என்றால், தமிழகத்தில் நல்லது நடக்கும் என இவ்வளவு பேர் காத்திருக்கிறார்கள் எனத் தெரிகிறது. நாம் யாரையும் நம் இயக்கத்துக்கு வரும்படி அழைக்கவில்லை. நம் செயல்பாடுகளை பார்த்து மக்கள் நம்மிடம் இணைய வேண்டும்.

இப்போது வீ தி லீடர்ஸ் இயக்கத்தில் 19 லட்சம் பேர் இணைந்துள்ளனர். இந்த எண்ணிக்கை 50 லட்சமாக உயரும் போது தமிழக மக்கள் நம்மை அழைக்கின்றார்கள் என்று பொருள். இந்த 50 லட்சம் பேரும் தன்னார்வமாகநம்மோடு வரவேண்டும். இனி அடுத்த 6 மாதங்களில், ஒவ்வொரு மாதமும் ஒரு முக்கிய பிரச்சினையைமக்களிடம்கொண்டு செல்வோம். இதுகுறித்து நாம் மக்களிடம் தொடர்ந்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

19 லட்சத்தில் 83 சதவீதம் பேர் ஆண்கள், 17 சதவீதம் பேர் பெண்கள் இருக்கிறார்கள். மாற்றம் வேண்டும் என இத்தனை சதவீதம் மகளிர் நம்மோடு இணைந்துள்ளனர். இதனை 50 சதவீதமாக மாற்ற வேண்டும். நம் அமைப்பில் 54 சதவீதம் பேர் 39 வயதுக்கு கீழே உள்ளனர். அவர்கள் மாற்றம் வேண்டும் என்று நினைக்கிறார்கள். 39 வயதுக்கு கீழே உள்ளவர்கள் 2026ல் தமிழகத்தில் ஒரு ஆட்சி மாற்றத்தை உருவாக்கினார்கள். அவர்கள் 2031ல் ஒரு மற்றுமொரு ஆட்சி மாற்றத்தை நிச்சயம் உருவாக்குவார்கள்.

இனி ஒவ்வொரு ஆண்டும் ஜூலை மாதம் போதைக்கு எதிரான மாதமாக இருக்கும். போதை இல்லாத தமிழகத்தை நம் காலத்தில் உருவாக்க வேண்டும். தவெக ஆட்சியை விமர்சிக்க வேண்டும் என என்னிடம் சொல்கிறார்கள். ஒரு கோடியே 68 லட்சம் பேர் ஓட்டு போட்டு இந்த ஆட்சியை கொண்டு வந்துள்ளனர். அதற்கு மரியாதை கொடுக்க வேண்டும். இவர்கள் 10 ஆண்டுகள் எம்எல்ஏக்களாக இருக்கவில்லை. அனைவரும் புதியவர்கள். செங்கோட்டையனை தவிர அமைச்சர்கள் அனைவரும் புதியவர்கள். அவர்கள் கொஞ்சம் தடுமாறத்தான் செய்வார்கள். அவர்களை தூக்கி பிடிக்க வேண்டும். அழுத்தக் கூடாது.

நாம் மூர்க்கத்தனமாக அதிகாரத்தை பிடிக்க வரவில்லை. நல்ல சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் இந்த அமைப்பு இருக்கும். எனவே இந்த ஆட்சியை ஒரு ஆண்டுக்கு விமர்சிக்க போவதில்லை. 2031ல் தமிழக மக்கள் முன்பு நம்முடைய அரசியல் கட்சி நிற்கும். நாம் ஆரோக்கிய அரசியலுக்காக நிற்போம், அற்ப அரசியலுக்காக நிற்க மாட்டோம். மக்கள் நமக்கு வாய்ப்பு தருவார்கள்" என்றார்

## கடலலை இழுத்துச் சென்ற உக்ரைன் நாட்டு இளம் பெண்ணை உயிரை பணயம் வைத்து மீட்ட கடலோரகாவல் படையின் மெரினா உயிர்காக்கும் குழுவினர்



கடலலை இழுத்துச் சென்ற உக்ரைன் நாட்டு இளம் பெண்ணை உயிரை பணயம் வைத்து மீட்ட கடலோரகாவல் படையின் மெரினா உயிர்காக்கும் குழுவினர்

இளம்பெண்ணைகடலலை இழுத்துச்செல்வதும், உயிரை பணயம் வைத்து மெரினா உயிர் காக்கும் குழுவினர் மீட்கும் வீடியோ நேற்று மாலை 4 மணி அளவில் சென்னை மெரினா கண்ணகி சிலை பின்புறம் உள்ள கடலில் குளித்துக் கொண்டிருந்த வெளிநாட்டு இளம்பெண் ஒருவர் திடீரென கடல் அலையால் இழுக்கப்பட்டு சுமார் 100 மீட்டர் தூரம் வரை கடலுக்குள் சென்று தத்தளித்துள்ளார்.

அவரது அலறல் சத்தம் கேட்டு பொதுமக்கள் அங்கிருந்த பாதுகாப்பு பணி காவலர்களுக்கு தகவல் அளித்துள்ளனர்.

உடனடியாக "கடலோரகாவல்படை குழுமத்தின் மெரினா உயிர் காக்கும் குழுவினருக்கு" தகவல் அளித்து அதன் பேரில் உடனடியாக காவலர் முத்து சரவணன் மற்றும் மீனவர்களான பவினேஷ், விக்னேஷ் ஆகியோர் சற்றும் யோசிக்காமல் தங்களது உயிரை பணயம் வைத்து கடலுக்குள் குதித்து பத்திரமாக இளம் பெண்ணை கரைக்கு மீட்டு வந்தனர்.

பின்னர் மருத்துவ குழுவினர் வந்து முதலுதவி செய்து இளம் பெண்ணை பத்திரமாக மீட்டனர்.

போலீசார் அவரிடம் நடத்திய விசாரணையில், அவர் உக்ரைன் நாட்டைச் சேர்ந்த இளம் பெண் அனுஷ்கா என்பது தெரியவந்தது. சில தினங்களுக்கு முன்பாக தமது குடும்பத்தினர்மற்றும்நண்பர்களோடுசென்னைக்குசுற்றுலா வந்ததும், சென்னையில் உள்ள பிரபல நட்சத்திர விடுதியில் தங்கி வருவதும் தெரிய வந்தது.

இந்த நிலையில், இளம்பெண் அனுஷ்கா மற்றும் அவரது நண்பர்கள் என மூன்று நபர்கள் இன்று மாலை மெரினா கடற்கரைக்கு வந்ததும் அப்போது அனுஷ்காகடலில் குளிக்க செல்லும் போது கடலலை இழுத்துச் சென்றதும் தெரியவந்தது.

இதனையடுத்து உக்ரைன் நாட்டைச் சேர்ந்த அனுஷ்காவை பத்திரமாக அவரது குடும்பத்தினர் மற்றும் நண்பர்களோடு போலீசார் அனுப்பி வைத்தனர்.

உக்ரைன் நாட்டு சுற்றுலா பயணிகள் இளம்பெண்ணை மீட்டதற்காக கண்ணீர் விட்டு தங்களது நன்றியை காவல்துறையினருக்கு தெரிவித்து சென்றனர்.

இந்த நிலையில், கடலையில் இழுத்துச் செல்லப்பட்ட உக்ரைன்நாட்டு இளம்பெண்ணைதங்களது உயிரைபணயம் வைத்து மெரினா உயிர்காக்கும் குழு மீட்கும் வீடியோ காட்சிகள் வெளியாகி உள்ளது.

## போதைப்பொருள் பிரச்சினை குறித்து யாராவது பேச மாட்டார்களா என்ற ஏக்கம் இளைஞர்கள் மற்றும் பெற்றோர்கள் மத்தியில் பெருமளவில் உள்ளது அமர் பிரசாத் ரெட்டி பேட்டி






சென்னை விமான நிலையத்தில் வீ த லீடர்ஸ் நிர்வாகி அமர் பிரசாத் ரெட்டி சாரி தலைவா செய்தியாளர்களும் கூறியதாவது

சுமார் 20, 25 ஆண்டுகளுக்கு முன்பு பெண்கள் இரவு 8 மணிக்கு மேல் வெளியில் நடமாடவே பயந்த சூழ்நிலை இருந்தது, ஆனால் இன்று போதைப்பொருட்களின் பேராபத்தால் ஒட்டுமொத்த சமூகமும் அதே போன்றதொரு அச்சமான சூழலை எதிர்கொண்டுள்ளது.

முன்பு போதைப்பொருள் புழக்கம் என்பது ஏதோ ஒரு குறிப்பிட்ட பணக்கார சமூகத்திற்குள் மட்டும் ரகசியமாக கிடைக்கக் கூடிய ஒன்றாக இருந்தது. ஆனால் இன்று, அரசுப் பள்ளிகளுக்கு அருகில் கூட சிந்தடிக் ட்ரக்ஸ் எளிதாக விற்கப்படும் அளவிற்கு, அனைத்துத் தெருக்களிலும், சிறு பள்ளிகளிலும் கூட அது பரவியுள்ளது.

இதனை எதிர்த்து அண்ணாமலை அவர்களின் தலைமையில், இந்த மாதத்தை 'போதைப்பொருள் இல்லாத மாதம்' ஆக அறிவித்து பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக, தமிழகத்தில் முதன்முறையாக எந்த வித அரசியல் நோக்கமும் இல்லாமல், முற்றிலும் ஒரு சமூக நலனுக்காக பொள்ளாச்சியில் மிக பிரம்மாண்டமான முறையில் முதல் மாநாடு நடத்தப்படவுள்ளது. இந்த மாநாட்டிற்குத் தங்களை அணிதிரட்ட எந்தவொரு விளம்பரமோ அல்லது முறையான அழைப்போ செய்யப்படாத நிலையிலும், மக்கள் தாங்களாகவே முன் வந்து கலந்துகொள்கின்றனர். இதில் 50,000 முதல் 75,000 பேர் வரை பங்கேற்பார்கள் என எதிர்பார்க்க ப்படுகிறது.

இதைத்தொடர்ந்து, இந்த மாதத்திலேயே திருச்செந்தூரிலும் போதை ஒழிப்புக்காக மற்றொரு மிகப்பெரிய மாநாடு நடத்தப்பட வு ள் ள து . தமிழக அரசியல் இனி வரும் காலங்களில் வெற்று விவாதங்களாக இல்லாமல், பிரச்சினைகளை மையப்படுத்திய அரசியலாக இருக்க வேண்டும் என்று அண்ணாமலை விரும்புகிறார். அதன் முதல் படியாக இந்த மாதம் போதை ஒழிப்பு கையில் எடுக்கப் பட்டுள்ளது,

அடுத்த மாதம் சுற்றுச்சூழல் சார்ந்த பிரச்சினைகளை மையமாக வைத்து சென்னையில் நிகழ்ச்சிகள் திட்டமிடப்ப ட்டுள்ளது.

போதைப்பொருள் பிரச்சினை குறித்து யாராவது பேச மாட்டார்களா என்ற ஏக்கம் இளைஞர்கள் மற்றும் பெற்றோர்கள் மத்தியில் பெருமளவில் உள்ளதால், வெறும் மாரத்தான் அல்லது விழிப்புணர்வு ஓட்டங்கள் நடத்துவதோடு நிறுத்தாமல், சமூகத்தில் நேரடி ஆக்ஷன் மூலமாக விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

அண்ணாமலைபேசிய 25 நிமிட வீடியோ ஒன்றின் இறுதியில் குறிப்பிட்டதை மட்டுமே பார்த்து, *We the Leaders* அமைப்பில் தற்போது வரை 19 லட்சம் பேர் இணைந்துள்ளனர். யாரையும் வற்புறு த்தியோ அல்லது திட்டமிட்டோ இதில் இணைக்கவில்லை .

மிகப்பெரிய கட்சிகளின் ஆக்டிவ் மெம்பர்ஷிப் எண்ணிக்கையே சந்தேகத்தி ற்குரியதாக இருக்கும் நிலையில், இந்த எண்ணிக்கை மிக முக்கியமானது.

இன்று நடைபெறும் இந்த மாநாட்டில் 0% கூட அரசியல் ஈடுபாடு இல்லை, 100% சமூக நலன் சார்ந்த நோக்கம் மட்டுமே உள்ளது. இந்த அமைப்பு எப்போது அரசியல் கட்சியாக மாறும் என்பதைப் பொருத்தமான நேரத்தில் அண்ணாமலை அவர்களே முடிவெடுப்பார்.

மக்களுக்கு நல்லது செய்வதே உண்மையான அரசியல் என்பதால், இதையும் ஒரு நல்ல அரசியலாகவே பார்க்கிறோம்.

அனைத்து வீடுகளிலும் குழந்தைகள் இருப்பதால், இந்த போதை ஒழிப்புச் செய்தியை ஒரு முக்கிய சமூகக் கடமையாகக் கருதி இளைஞர்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். மேலும், இது முற்றிலும் போதை ஒழிப்புக்கான நிகழ்வு என்பதால், மேகதாது அணை போன்ற அரசியல் ரீதியான கேள்விகளுக்குப் பதிலளிக்க மறுத்து, அது குறித்து அண்ணாமலை அவர்களிடமே கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள் என கூறினார்.

தின கனி

13.07.2026

# மணிமங்கலம் பகுதியில் செயல்படும் டாஸ்மார்க் கடையை மூடாமல் ஏமாற்றும் அதிகாரிகள் டாஸ்மாக் கடையை மூடுவதாக நீதிமன்றத்தில் தெரிவித்துவிட்டு பொதுமக்களை ஏமாற்றுவதாக பொதுமக்கள் வேதனை

காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் அருகே மணிமங்கலம் ஊராட்சியில் குடியிருப்புகள் மத்தியிலும், நெடுஞ்சாலையை ஒட்டியும் டாஸ்மாக் கடை எண் 4086 மதுபான பாருடன் செயல்பட்டு வருகிறது.



பொதுமக்களுக்கு இடையூறாக உள்ள இந்த டாஸ்மார்க் கடை மற்றும் மது பானபாரைஅகற்றமாவட்ட ஆட்சியர் மற்றும் டாஸ்மார்க் உயர் அதிகாரிகளுக்கு பல்வேறு புகார்கள் அளித்த நிலையிலும் டாஸ்மாக் அதிகாரிகள் கண்டுகொள்ளாமல் அலட்சியப்படுத்தியதால் பொதுமக்கள் சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டது.

நீதிமன்றத்தில் மணிமங்கலம் பகுதியில் செயல்படும் டாஸ்மாக் கடையை மூடுவதாக டாஸ்மாக் அதிகாரிகள் உத்தரவாதம் அளித்தனர்.

ஆனால் தற்போது தவெக அரசு ஆட்சி அமைந்தவுடன் டாஸ்மார்க் கடை மூடப்படும் என பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் எதிர்பார்த்த நிலையில், டாஸ்மார்க் அதிகாரிகள் நீதிமன்றத்தையும் பொது மக்களையும் ஏமாற்றி, டாஸ்மார்க் கடையை மூடாமல் உள்ளனர்.

தொடர்ந்து குடியிருப்பு பகுதி மற்றும் நெடுஞ்சாலை அருகே இந்த டாஸ்மாக் கடை ,மதுபான பார் இயங்குவதால் பல்வேறு சாலை விபத்துக்கள் ஏற்படுவதுடன், மது போதை ஆசாமிகள் பொதுமக்கள் குடியிருப்பு வாசிகளுக்கு பல வகையில் இடையூறு செய்கின்றனர். இதனால் அந்த பகுதியில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பு இல்லாமல் அச்சத்துடனே வாழும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

டாஸ்மார்க் கடையை மூடுவதாக நீதிமன்றத்தையும் பொதுமக்களையும் டாஸ்மார்க் அதிகாரிகள் அரசு உயர் அதிகாரிகள் ஏமாற்றுவது கண்டனத்துக்குரியது, இந்த பகுதியில் செயல்படும் டாஸ்மார்க் கடையை மூடாவிட்டால் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்படும் என்று பாதிக்கப்பட்ட பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்

# லஞ்ச ஒழிப்புத்துறையின் விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு அளிப்பேன் சிங்கப்பூரிலிருந்து சென்னை திரும்பிய முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு சென்னை விமான நிலையத்தில் பேட்டி

சென்னை,நெடுஞ்சாலை துறை டெண்டர் முறைகேடு வழக்கில் முன்னாள் அமைச்சர் எ.வ.வேலுக்கு லஞ்சஒழிப்புத்துறை கடந்த மூன்றாம் தேதி நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்க சம்மன் அனுப்பி உத்தரவிட்டது.




ஆனால் உடல் நல குறைவு காரணமாக சிங்கப்பூரில் இருதய சிகிச்சை பெற்று அவர் சம்மனில் ஆஜராகவில்லை இது எடுத்து அவரது வழக்கறிஞர்கள் மருத்துவ சான்றிதழ் உடன் கால அவகாசம் கோரி லஞ்ச ஒழிப்புத்துறை அலுவலகத்தில் முன்னாள் அமைச்சர் எ.வ.வேலுவின் கடிதத்தை ஒப்படைத்தனர்.

இந்த நிலையில் இரண்டாவது சம்மன் அனுப்பவும் அதில் முன்னாள் அமைச்சர் வேலுவை நேரில் இராஜராஜ விளக்கம் அளிக்க லஞ்ச ஒழிப்புத் துறை போலீசார் தரப்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆனால் இதற்கிடையில் கரூரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் விஜய் ஒரு அமைச்சர் ஓடி ஒளிந்து விட்டார் இன்னொரு அமைச்சர் மருத்துவமனையில் அனுமதி ஆகிவிட்டார் என்ன விமர்சனம் செய்திருந்தார்.

இந்த நிலையில் சிங்கப்பூரில் சிகிச்சை முடிந்து சென்னை சர்வதேச விமான நிலையத்திற்கு வந்த முன்னாள் அமைச்சர் எ.வ. வேலு விமான நிலையத்தில் செய்தியாளர்களை சந்தித்து தனது உடல்நிலை மற்றும் லஞ்ச ஒழிப்பு துறை விசாரணை குறித்து விளக்கம் அளித்தார்.

அப்போது அவர் கூறுகையில்,

கடந்த 2016 ஆம் ஆண்டு முதல் சிங்கப்பூரில் உள்ள மவுண்ட் எலிசபத் மருத்துவமனையில் இதயம் தொடர்பான சிகிச்சை மற்றும் மருத்துவ பரிசோதனைகள் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறேன் அதன் தொடர்ச்சியாக கடந்த 2023 ஆம் ஆண்டிலும் அதே மருத்துவமனையில் பரிசோதனை மேற்கொண்டேன்.

சட்டமன்ற தேர்தல் முடிந்த பிறகு மீண்டும் உடல்நிலை பரிசோதனைக்காக சிங்கப்பூர் செல்ல முடிவு செய்து கடந்த மாதம் 15 ஆம் தேதி விசாவுக்கு விண்ணப்பித்தேன் 17ஆம் தேதி விசாகடித்ததும் 25ஆம் தேதி இண்டிகோ விமானத்தில் டிக்கெட் முன்பதிவு செய்தேன்.

ஆனால் 25 ஆம் தேதி காலை என் வீட்டில் லஞ்ச ஒழிப்பு துறையினர் சோதனை நடத்தினர் அந்த சோதனையில் நான் முழு ஒத்துழைப்பு அளித்தேன் அன்றைய வைரத்தை ரத்து செய்து மறுநாள் 26 ஆம் தேதி சிங்கப்பூர் சென்றேன் அங்கு இதயம் நரம்பியல் வயிறு மற்றும் ஒவ்வாமை தொடர்பான பல்வேறு மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன பல்வேறு நிபுணர் மருத்துவர்களின் ஆலோசனைகளையும் பெற்றேன். ஒவ்வாமை சிகிச்சைக்காக பல நாட்கள் தொடர்ந்து கண்காணிப்பில் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது நான் சிகிச்சை பெற்றதற்கான அனைத்து மருத்துவ ஆவணங்களும் மருத்துவர்களின் அறிக்கைகளும் என்னிடம் உள்ளன.

சிங்கப்பூரில் மருத்துவ பரிசோதனையில் இருந்த போது லஞ்சஒழிப்புத்துறை விசாரணைக்கு ஆஜராக சமன் அனுப்பியதாக தகவல் கிடைத்தது உடனடியாக வழக்கறிஞர் மூலம் கடிதம் அனுப்பி மருத்துவ பரிசோதனையில் இருப்பதால் 10 நாட்கள் அவகாசம் வழங்குமாறு கேட்டுக் கொண்டேன் பின்னர் மீண்டும் நோட்டீஸ் அனுப்பப்பட்ட போதும் மருத்துவம் முடிந்த பிறகு எந்த தேதியில் அழைத்தாலும் விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு அளிப்பேன் என எழுத்துப் பூர்வமாக தெரிவித்தேன்.

ஓடுறாங்க ஒளியுறாங்க பதுங்குறாங்க என்ற குற்றச்சாட்டுகளில் எந்த உண்மையும் இல்லை நான் மருத்துவ சிகிச்சைக்காக தான் சிங்கப்பூர் சென்றேன் யாருக்கும் பயந்து செல்லவில்லை சுற்றுலாவுக்காகவோ வேறு எந்த காரணத்திற்காகவோ செல்லவில்லை கடந்த 2016 2023 2026 ஆகிய ஆண்டுகளில் தொடர்ச்சியாக அதே மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறேன் அதற்கான அனைத்து ஆதாரங்களும் என்னிடம் உள்ளது சமூக வலைதளங்களில் பலரும் கற்பனையான தகவல்களை பரப்பினர் அதற்கான முழு விளக்கத்தையும் தற்போது அளித்துள்ளேன்.

தொடர்ந்து குறிவைக்கப்படுவீர்களா என கேட்ட கேள்விக்கு,

என்னை தனிப்பட்ட முறையில் குறிவைக்க வேண்டிய அவசியம் இல்லை திமுக சட்டப்பேரவை குறைடாவாக கட்சித் தலைவர் என்னை நியமித்துள்ளார் சட்டப்பேரவையில் உறுப்பினர்கள் சார்பில் அரசிடம் கேள்வி எழுப்புவதும் கருத்து தெரிவிப்பதும் எனது கடமை அந்த கடமையை தான் செய்து வருகிறேன் அது சிலருக்கு பிடிக்கிறதா பிடிக்கவில்லையா என்பது வேறு விஷயம்.

ஜூலை 15ஆம் தேதி விசாரணைக்கு ஆஜராகிவீர்களா என்ற கேள்விக்கு,

நிச்சயம் ஆஜராகுவேன் ஜூலை 12ஆம் தேதிக்குப் பிறகு எந்த தேதியில் அழைத்தாலும் விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு அளிப்பேன் என்று ஏற்கனவே தெரிவித்துள்ளேன் அதில் எந்த மாற்றமும் இல்லை இந்த வழக்கு தற்போது நீதிமன்றத்தில் இருப்பதால் அதன் விவரங்கள் குறித்து மேலும் கருத்து தெரிவிக்கவிரும்பவில்லை நீதித்துறையின் மீது முழு நம்பிக்கை உள்ளது நான் எந்த தவறும் செய்யவில்லை நீதிமன்றத்தில் எனக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது என இவ்வாறு கூறினார்.

# புழல் அருகே பாதாள சாக்கடை திட்டப் பணிகளின் போது ஜேசிபி இயந்திரத்தின் பெல்ட் அறுந்து ராட்சத இரும்பு தகடு விழுந்ததில் 3வயது சிறுவன் பரிதாபாக உயிரிழப்பு

சென்னை புழல் அடுத்த காவாங்கரை கண்ணப்பசாமி நகர் பகுதியை சேர்ந்தவர் விக்னேஷ். மென்பொருள் நிறுவன ஊழியரான விக்னேஷின் 3வயது மகன் ஷாருக்ஈஸ்வரன். சனிக்கிழமை மாலை விக்னேஷ் தனது 3 வயது மகனை இருசக்கர வாகனத்தில் அழைத்துக் கொண்டு பேக்கரிக்கு சென்று விட்டு மீண்டும் வீடு திரும்ப முற்பட்டு ள்ளனர். சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட 23வது வார்டில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. பாதான சாக்கடை திட்ட பணிகளுக்காக ராட்சத தொட்டி மற்றும் ராட்சதக் குழாய் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கிரேன் மூலம் ராட்சதக் இரும்பு தகடு புதைப்ப தற்காக பணிகள் நடைபெற்ற போது எதிர்பாராத விதமாக கிரேனில் இருந்த ரோப் அறுந்து ராட்சத இரும்பு தகடு கீழே விழுந்தது. அப்போது அவ்வழியே வந்த தந்தை, மகன் இருவர் மீது விழுந்ததில் விக்னேஷ் நூலிழையில் உயிர்தப்பிய நிலையில் 3 வயது சிறுவன் ஷாருக்ஈஸ்வரன் வயிற்றுப் பகுதியில் ராட்சத இரும்பு தகடு விழுந்துள்ளது. இதில் பலத்த காயம் அடைந்து உயிருக்கு ஆபத்தான நிலையில் உள்ள சிறுவன் ஷாருக் ஈஸ்வரன் மாதவரத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அதிக அளவு ரத்தப்போக்கு உள்ளிட்ட பாதிப்புகள் உள்ளநிலையில்தொடர்ந்து ரத்தம் ஏற்றப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில் நள்ளிரவில் சிகிச்சை பலனின்றி சிறுவன் பரிதாபமாக உயிரிழந்தார். இந்த சம்பவம் குறித்து புழல் காவல்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர். பாதாள சாக்கடை பணிகளின் போது 3 வயது சிறுவன்மீது ராட்சத இரும்பு தகடு விழுந்து உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது



# நடிகர் சூர்யாவின் பிறந்தநாளை முன்னிட்டு அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் ரத்ததான முகாம்

நடிகர் சூர்யாவின் பிறந்தநாளை முன்னிட்டு வடசென்னை வடக்கு மாவட்ட சூர்யா தலைமை நற்பணி இயக்கம் மற்றும் மாவட்ட இளைஞரணி சார்பில் அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் ரத்ததான முகாம் நடைபெற்றது




சென்னை ராயபுரம் அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் நடிகர் சூர்யாவின் பிறந்தநாளை முன்னிட்டு வடசென்னை வடக்கு மாவட்ட சூர்யா தலைமை நற்பணி இயக்கம் மற்றும் மாவட்ட இளைஞரணி சார்பில் வடசென்னை வடக்கு மாவட்ட மாவட்ட தலைவர் ஜே.பி விமல் ராஜ் தலைமையில் ரத்ததான முகாம் நடைபெற்றது இதில் 200க்கும் மேற்பட்ட நடிகர் சூர்யா ரசிகர்கள் மற்றும் பொதுமக்கள் ஆர்வத்துடன் ரத்ததானம் செய்தனர். இதில் சிறப்பு விருந்தினராக ராஜசேகர் கற்பூர பாண்டியன், ஹரிஷ் ராஜ் ஆகியோர் கலந்து கொண்டு ரத்ததானம் வழங்கியவர்களுக்கு சான்றிதழ் மற்றும் பழங்கள் வழங்கினர். நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை மாவட்ட தலைவர் மற்றும் வடசென்னை வடக்கு மாவட்ட செயலாளர் பிரகாஷ் வடசென்னை வடக்கு மாவட்ட பொருளாளர் முகமது முஜாஹித் வடசென்னை வடக்கு மாவட்டதுணைத்தலைவர் தர்மாவடசென்னைவடக்கு மாவட்டதுணைசெயலாளர் பிரபாகரன் வடசென்னை வடக்கு மாவட்ட இளைஞரணி நிர்வாகிகள் செய்திருந்தனர்.

# சொத்தை பிடுங்கிக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறிய மகனிடம் இருந்து சொத்தை மீட்டு மாவட்ட ஆட்சியர் உத்தரவின் பேரில் முதியவரை மீண்டும் வீட்டில் சேர்த்த காவல்துறையினர்

சென்னை மணலி திருவள்ளூர் நகரை சேர்ந்த மகாலிங்கம் வயது 77 இவருக்கு மகன் விஜயகுமார் மற்றும் மைதிலி என்ற மகள் உள்ளனர் இவர் தனது கடைசி காலத்துக்கு முன்பாக தனது மணலில் உள்ள 12 ஆயிரம் ஸ்கொயர் பீட் சொத்தில் மகன் விஜய குமாருக்கு 7500 மகள் வழி பேத்தி சரண்யாவுக்கு 4500 ஸ்கொயர் சொத்தையும் எழுதி வைத்துள்ளார். இந்நிலையில் மொத்தத்தையும் மகன் விஜயகுமார் மற்றும் அவரது மனைவி ராதிகா ஆகியோர் பிடுங்கிக் கொண்டு முதியவர் மகாலிங்கத்தை வீட்டை விட்டு வெளியேற்றி உள்ளனர் இதனால் செய்வது அறியாது சுற்றித்திரிந்து வந்த முதியவர் உறவினர்உதவியுடன் கோட்டாட்சியரை சந்தித்துள்ளார் அவர் கொடுத்த உத்தரவையும் மகன் உதயகுமார் மதிக்கவில்லை இந்நிலையில் முதியவர்கள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சியரை சந்தித்துள்ளனர் மாவட்ட ஆட்சியர் உத்தரவின் பேரில் மணலி காவல் ஆய்வாளர் மற்றும் போலீசார் முதியவரை மீட்டு அவரது சொந்த வீட்டில் சேர்த்தனர் இந்நிலையில் மகனும் அதே வீட்டில் இருந்துள்ளார் நிலையில் மகனால் பெரியவருக்கு எதுவும் பிரச்சனை வரும் என்ற காரணத்தினால் மகன் வெளியே சென்று விட்டார் மேலும் அவர் முதியவர் மீது நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து உள்ளார் மேலும் முதியவர் தெரிவிக்கையில் சொத்து வைத்திருக்கும் முதியவர்கள் தங்களுடைய காலத்துக்குப் பின்பு தங்களுடைய வாரிசுகளுக்கு கிடைக்கும் படி எழுதி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார் மேலும் மணலி காவல்துறையினருக்கு தங்களுடைய நன்றியையும் தெரிவித்துக் கொண்டார்.

# செங்கல்பட்டு அருகே போலீசார் வாகன தணிக்கையின் போது 5 கிலோ கஞ்சா மற்றும் 60 ஆயிரம் ரூபாய் பணம் சிக்கியது

செங்கல்பட்டு மாவட்டம் சிங்கபெருமாள்கோவில் அருகே திருக்கச்சூர் பகுதியில் போலீசார் வாகன சோதனையில் ஈடுபட்டனர் அப்போது சந்தேக குறிய காரை மடக்கி போலீசார் சோதனையில் ஈடுபட்ட போது விற்பனைக்காக வைத்திருந்த 5 கிலோ கஞ்சாவைபறிமுதல்செய்துகடத்தலுக்கு பயன்படுத்திய காரையும் பறிமுதல் செய்தனர்.



கஞ்சாவை கடத்தி வந்த நபரை கைது செய்து சிங்கபெருமாள்கோவில் காவல் நிலையம் அழைத்து சென்று விசாரணை மேற்கொண்டனர். அப்போது கஞ்சா கடத்தி வந்தது சென்னை ராயபுரத்தை சேர்ந்த செந்தில்(எ)தாடி செந்தில் (52) என தெரிய வந்தது அவர் மீது ஏற்கனவே பல வழக்குகள் நிலுவையில் உள்ளது பி பதிவு சரித்திர பதிவேடு குற்றவாளி என காவல் துறை தரப்பில் தகவல் தெரியபடுத்தினர் மேலும் அவரிடம் இருந்த 60 ஆயிரம் ரூபாய் பணம் பறிமுதல் செய்தனர்

இதனை தொடர்ந்து செந்தில் மீது சிங்கபெருமாள்கோவில் போலீசார் வழக்கு பதிவு செய்து செங்கல்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர் செங்கல்பட்டு அருகே போலீசார் வாகன சோனையின் போது 5 கிலோ கஞ்சா மற்றும் 60 ஆயிரம் ரூபாய் பணம் சிக்கிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# பொன்னேரி நகர பெரும்பேடு பாதயாத்திரை குழுவினர் சார்பில் பெரும்பேடு முத்துக்குமாரசாமி ஆலயத்திற்கு 14 ஆம் ஆண்டு பால்குடம் எடுத்து தங்களது நேர்த்திக்கடன் செலுத்தினர்

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி நகராட்சி உட்பட்ட பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் வருடம் தோறும் பொன்னேரி நகர பெரும்பேடு பாதையாத்திரை குழு சார்பில் பெரும்பேடு ஸ்ரீ முத்துக்குமாரசாமி ஆலயத்திற்கு பால்குடம் எடுத்து நேர்த்திக்கடன் செலுத்தி வருவது வழக்கம் அதன்படி 14வது ஆண்டாக நேற்று இக்குழுவை சேர்ந்த ஆண்கள் பெண்கள் சிறுவர் சிறுமியர் என சுமார் 200க்கும் மேற்பட்டோர் பெரும்பேடு கிராமத்தில் உள்ள பெருமாள் கோவில் வளாகத்தில் இருந்து பால்குடம் ஏந்தி ஊர்வலமாக பெரும்பேடு முத்துக்குமாரசாமி ஆலயத்திற்கு வந்து முருகருக்கு அபிஷேகம் செய்து தங்களது நேர்த்திக்கடனை செலுத்தினர் இதில் பலர் காவடி எடுத்து



வந்திருந்தனர் முடிவில் பக்தர்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

# முதல்வர் ஜோசப் விஜய் பிறந்தநாளை முன்னிட்டு ஆயிரம் பேர்களுக்கு நல திட்டம்

திருவொற்றியூர் தமிழக முதல்வர் ஜோசப் விஜய் பிறந்தநாளைமுன்னிட்டுஆயிரம்பேருக்குநலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி ராகவா வெங்கடேஷ் தலைமையில்சகாயம் முன்னிலையில்நடைபெற்றது இதில் சிறப்பு விருந்தினராக திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் செந்தில்குமார் கலந்துகொண்டு ஏழை எளியவர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார் இதில் மாவட்ட இணை செயலாளர்ஆனந்தகுமார்மாவட்டகழகபொருளாளர் சீனிவாசன் மாவட்டத் துணைச் செயலாளர் மாரி மாவட்டதுணைசெயலாளர்பிரபுமாவட்டசெயற்குழு உறுப்பினர் லோகேஷ் உள்ளிட்டோர் பங்கேற்பு.



# கால் மேல் கால் போட்டு அமர்ந்திருக்கும் அம்பேத்கர் சிலை திறக்க எதிர்ப்பு... சேலத்தில் பரபரப்பு

சேலம், ஜூலை 13

சேலம் மாவட்டம் கெங்கவல்லி அருகே ஒதியத்தூர் ஊராட்சியில் உள்ள நான்கு ரோடு ரவுண்டானா பகுதியில் 2020ம் ஆண்டு அம்பேத்கர் சிலை ஒரு தரப்பினரால் அமைக்கப்பட்டது. நாற்காலியில் கால் மேல் கால் போட்டு அமர்ந்திருப்பதுபோல் அம்பேத்கர் சிலை வடிவமைக்கப்பட்டிருந்தது. அந்த சிலையை 2021ம் ஆண்டுதிறக்க முற்பட்டபோது, மற்றொரு தரப்பினர் இந்த பகுதியில் சிலையை திறக்க கூடாது என்று எதிர்ப்பு தெரிவித்ததால் பதற்றமான சூழல் நிலவியது.

அப்போது பணியில் இருந்த தாசில்தார் வெங்கடேசன் தலைமையில் வருவாய்த்துறை அதிகாரிகள் மற்றும் போலீசார், அந்த சிலை மூடப்பட்டு எதுவாக இருந்தாலும் பேசி முடிவு செய்த பின்பு சிலையை திறக்க வேண்டும் என்றும் கூறினார்கள். இதையடுத்து கடந்த 5 ஆண்டுகளாக சிலை திறக்காமல் துணியால் கட்டப்பட்டிருந்தது.

நிலையில் நேற்று திடீரென்றுசிலைதிறக்கப்பட்டு இருந்தது. இதைபார்த்து அந்த பகுதியில் உள்ள ஒரு தரப்பினர் அதிர்ச்சி அடைந்தனர். மேலும் உடனடியாக சிலையை மூட வேண்டும் என்று ஒரு தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்தனர். இன்னொரு தரப்பினர் சிலை திறக்கப்பட்டு விட்டதால் இனிமேல் மூட மாட்டோம் என்று கூறியதால் பதற்றம் ஏற்பட்டது. உடனடியாக கெங்கவல்லி போலீசார் 50க்கும் மேற்பட்டோர் அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

இதையடுத்து ஆத்தூர் உதவி கலெக்டர் அலுவலகத்தில் இரு தரப்பினரையும் அழைத்து அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது அம்பேத்கர் சிலை அருகே உள்ள காமராஜர் மற்றும் ராஜீவ் காந்தி சிலை என 3 சிலைகளையும் தற்போது தற்காலிகமாக வருவாய்த்துறை உதவியுடன் தகரம் அடித்து மூட முடிவு செய்து உள்ளோம்.



எதுவாக இருந்தாலும் கோர்ட்டு அனுமதி பெற்ற பின்பு அம்பேத்கர் சிலையை திறக்க வேண்டும் என்றும், மேலும் தற்போது 2 சிலைகள் தற்காலிகமாக மூடப்படுகிறது என்றும் உதவி கலெக்டர் தமிழ் மணி முத்தரப்பு பேச்சுவார்த்தையில் கூறினார்.

இதனிடையே நேற்று இரவு 9 மணி அளவில் ஆத்தூர் உதவி கலெக்டர் தமிழ் மணி மற்றும் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு குத்தாலிங்கம் ஆகியோர் சம்பவ இடத்திற்கு சென்று 3 சிலைகளையும் தகரம் அடித்து மூடும் பணியை தொடங்கினர். அப்போது போலீசாருக்கும், அம்பேத்கர் சிலையை திறக்க வலியுறுத்தும் தரப்பினருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. உடனடியாக தீயணைப்பு துறை வாகனத்தின் மூலம் பொது மக்கள் கலைந்து செல்வதற்காக தண்ணீரை பீய்ச்சி அடித்தனர்.

அப்போது தள்ளுமுள்ளு ஏற்பட்டதில் பெண் போலீஸ் உள்பட 3 போலீசாருக்கும், ஒரு தரப்பை சேர்ந்த 3 பெண்களுக்கும் லேசான காயம் ஏற்பட்டது. அவர்கள் அனைவரும் கெங்கவல்லி அரசு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இதையொட்டி ஒதியத்தூர் பகுதியில் பதற்றமான சூழல் நிலவுவதால் அங்கு தொடர்ந்து போலீசார் குவிக்கப்பட்டு உள்ளனர்.

# திருவாரூரில் சட்டவிரோத மண் எடுப்பு: உடனடி நடவடிக்கை எடுக்க கோரி டிடிவி தினகரன் வலியுறுத்தல்



திருவாரூர், ஜூலை 13

அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் தனது எக்ஸ் தள பதிவில் கூறி இருப்பதாவது:

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி வட்டத்திற்கு உட்பட்ட துளசேந்திரபுரம் கண்ணாரப்பேட்டை வடக்கு ஏரியில் வண்டல் மண் எடுப்பதற்கு வழங்கப்பட்ட அனுமதியை பயன்படுத்தி அளவுக்கு அதிகமான மண்ணை எடுத்து சட்டவிரோதமாக தனியார் நிறுவனங்களுக்கு விற்பனை செய்து வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

விவசாய நிலங்களின் வளத்தை மேம்படுத்தும் வகையிலும், நீர்நிலைகளின் கொள்ளளவை அதிகரிக்கும் நோக்கத்திலும் வழங்கப்பட்ட வண்டல் மண் எடுப்புக்கான அனுமதியை சட்டவிரோதமாகப் பயன்படுத்தி வருவோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய காவல் துறை, அதனை தட்டிக் கேட்ட இளைஞர்களின் மீது வழக்குப்பதிவு செய்திருப்பது கடும் கண்டனத்திற்குரியது.

அரசு வகுத்துள்ள விதிமுறைகளை காற்றில் பறக்க விட்டு,

அனுமதிக்கப்பட்ட அளவை விட பல மடங்கு அதிகமாக இயந்திரங்கள் மூலம் இரவு, பகலாக மண் தோண்டி எடுக்கப்பட்டு, தனியார் நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்படுவது குறித்து பொதுமக்கள் பல முறை புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படாததின் மூலம் இந்த சட்டவிரோத செயல்களுக்கு காவல்துறையும் சம்பந்தப்பட்ட அரசுத்துறை அதிகாரிகளும் உடந்தையாக இருக்கின்றரா? என்ற சந்தேகம் அப்பகுதி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

நடவடிக்கை

எனவே, திருவாரூர் மாவட்டம் துளசேந்திரபுர கண்ணாரப்பேட்டை வடக்கு ஏரியில் நடைபெறும் மண் திருட்டை உடனடியாக தடுத்து நிறுத்திடும் நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, சட்டவிரோத மண் எடுப்பைத் தட்டிக் கேட்ட இளைஞர்கள் மீது பதியப்பட்ட வழக்குகளைத்திரும்பப்பெறவேண்டும் எனவும் காவல்துறையையும், தமிழக அரசையும் வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# இரும்பு தகடுகள் விழுந்து சிறுவன் உயிரிழப்பு: மேலாளர் உட்பட 3 பேர் கைது



சென்னை, ஜூலை 13

சென்னையை அடுத்த புழல் அருகே காவாங்கரை பகுதியில், பாதாளச் சாக்கடை பணிகள் நடந்து வருகிறது. இந்த நிலையில், இன்று காலை அந்த பகுதியில் 3 வயது சிறுவன் ஷாருக் ஈஸ்வரன் தனது தந்தையுடன் நடந்து சென்று கொண்டிருந்தான். அப்போது ஜேசிபி மூலம் இரும்பு தகடு தூக்கப்படரோப் திடீரென அறுந்து நடந்து சென்று கொண்டிருந்த சிறுவன் மீது தகடு பலமாக விழுந்தது.

இதில் சிறுவனுக்கு பலத்த காயம் ஏற்பட்டது. மகன் மீது இரும்பு தகடு விழுந்ததைபார்த்துதந்தை அதிர்ச்சி அடைந்தார். உடனே அருகில் இருந்தவர்கள் சிறுவனை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சிறுவனுக்கு டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்தனர். இருப்பினும் சிகிச்சை பலனின்றி சிறுவன் உயிரிழந்தான்.

இந்த நிலையில், உயிரிழந்த 3 வயது சிறுவனின் தந்தை அளித்த புகாரில் திட்ட மேலாளர் முத்துகுமார், மேற்பார்வையாளர் வெங்கடேசன், ஜே.சி.பி. ஆபரேட்டர் ரமேஷ் ஆகிய 3 பேரை போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இரும்பு தகடுகள் விழுந்து சிறுவன் உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# தேனியில் 2 வங்கி கிளைகளில் ரூ.14 கோடி நகைக்கடன் மோசடி: மேலாளர், ஊழியர்கள் பணிநீக்கம்



தேனி, ஜூலை 13

தேனி மாவட்டத்தில் தேசியமயமாக்கப்பட்ட வங்கியின் 2 கிளைகளில் நடந்துள்ள ரூ.14 கோடி நகைக்கடன் மோசடி தொடர்பாக வங்கி கிளைகளின் மேலாளர், ஊழியர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

தேனி மாவட்டம் ஓடைப்பட்டி மற்றும் கூழையனூர் ஆகிய பகுதிகளில் உள்ள தேசியமயமாக்கப்பட்ட வங்கியின் 2 கிளைகளில் அதிகாரிகள் நடத்திய தணிக்கையில், ரூ.14 கோடி மதிப்பிலான நகைக்கடன் மோசடி வெளிச்சத்திற்கு வந்துள்ளது. வங்கி லாக்கரில் இருந்த பல உறைகளில் நகைகள் ஏதுமின்றி காலியாக இருந்ததைக் கண்டு அதிகாரிகள் அதிர்ச்சியடைந்தனர். இந்த 2 கிளைகளிலும் பணியாற்றிய வங்கி மேலாளர் மற்றும் சில ஊழியர்கள் இந்த மோசடியில் ஈடுபட்டது தெரியவந்தது. இதையடுத்து, அவர்கள் உடனடியாக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து மாவட்ட குற்றப்பிரிவு போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவத்தில் பொதுமக்கள் யாரும் நேரடியாகப் பாதிக்கப்படவில்லை என்றும், வங்கியின் பணமே மோசடி செய்யப்பட்டுள்ளதாகவும் போலீசார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விடுமுறை தினம்: குற்றாலத்தில் சுற்றுலா பயணிகள் உற்சாக குளியல்



தென்காசி, ஜூலை 13

குற்றாலம் அருவிகளில் தற்போது தண்ணீர் சீராக விழுந்து வருகிறது. இன்று விடுமுறை தினம் என்பதால் உள்ளூர் மட்டுமின்றி வெளியூர்களில் இருந்தும், அண்டை மாநிலமான கேரளத்தில் இருந்தும் சுற்றுலா பயணிகள் வேன், பஸ், கார்களில் தங்களது குடும்பத்துடன் குற்றாலத்தில் குவிந்தனர்.

அவர்கள் அனைத்து அருவிகளிலும் ஆர்ப்பரித்து கொட்டும் தண்ணீரில் உற்சாகமாக குளித்து மகிழ்ந்தனர்.

குறிப்பாக ஐந்தருவி, மெயின் அருவி, பழைய குற்றாலம் அருவியில் குளிக்க சுற்றுலா பயணிகள் கூட்டம் அலைமோதியது. அங்கு நீண்ட வரிசையில் காத்திருந்து ஆர்வமுடன் குளித்தனர்.

சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரிப்பால் பாதுகாப்பு பணியிலும் அதிக அளவில் போலீசார் ஈடுபட்டிருந்தனர். குற்றாலம் பகுதியில் கடைகள் நடத்தி வரும் வியாபாரிகளுக்கும் வியாபாரம் விறுவிறுப்பாக நடைபெற்றதால் அவர்களும் மகிழ்ச்சி அடைந்தனர்.

# வியட்நாமில் 10 தமிழர்கள் உயிரிழப்பு: லாவா மொபைல் நிறுவனத்தின் அலட்சியம் காரணமா? வேல்முருகன் கேள்வி



சென்னை, ஜூலை 13

தமிழக வாழ்வுரிமை கட்சி தலைவர் வேல்முருகன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;

வியட்நாமில் சுற்றுலா பயணத்தின்போது நிகழ்ந்த படகு விபத்தில், தமிழ்நாட்டைச் சேர்ந்த முருகபிரபு (44) உள்ளிட்ட 10 பேர் உயிரிழந்த செய்தி மிகுந்த வேதனையையும் அதிர்ச்சியையும் அளிக்கிறது. அவர்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு, தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வியட்நாட்டிற்கு சுற்றுலா அழைத்துச் சென்றதாகக் கூறப்படும், லாவா மொபைல் நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்து இந்திய வெளியுறவுத்துறை, தமிழ்நாடு அரசு மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இணைந்து முழுமையான விசாரணை மேற்கொள்ள வேண்டும். பயணிகளின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டதா?, வானிலை எச்சரிக்கைகள் வழங்கப்பட்டனவா?, உயிர் காக்கும் உபகரணங்கள் மற்றும் அவசரகால பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தனவா?, பாதுகாப்பற்ற சூழ்நிலையில் பயணிகள் அழைத்துச் செல்லப்பட்டனரா? மேலும் எத்தனை பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்? என்பது குறித்து வெளிப்படையான விசாரணை நடத்தப்பட வேண்டும். விசாரணையில் பாதுகாப்பு விதிமுறைகள் மீறப்பட்டதோ அல்லது அலட்சியம் நடந்ததோ உறுதியானால், லாவா மொபைல் நிறுவனம் மற்றும் சம்பந்தப்பட்ட அனைவரின் மீதும் சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மேலும், உயிரிழந்த முருகபிரபு உள்ளிட்ட 10 பேர் குடும்பத்திற்கு உரிய இழப்பீடும், அனைத்து அரசு உதவிகளும் விரைவாக வழங்கப்பட வேண்டும். பத்து தமிழரின் உயிரிழப்பு வெறும் விபத்து என்ற பெயரில் மறைக்கப்படக்கூடாது. உண்மையை வெளிக்கொண்டு வந்து, பொறுப்புக்கூற வேண்டியவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்து, பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு முழுமையான நீதி கிடைப்பதைத் தமிழக அரசும், மத்திய அரசும் உறுதி செய்ய வேண்டும் எனத் தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிணற்றில் தவறி விழுந்து தொழிலாளி உயிரிழப்பு

தூத்துக்குடி, ஜூலை 13

தூத்துக்குடி அருகே கீழ தட்டப்பாறை பகுதியில் உள்ள தோட்டத்துக் கிணற்றில் தவறி விழுந்து கூலித் தொழிலாளி உயிரிழந்தார்.

தூத்துக்குடி அருகே கீழ தட்டப்பாறையைச் சேர்ந்த சுப்பையா(எ) மணி (வயது 45), கூலித் தொழிலாளி. கீழ தட்டப்பாறை கைலாசபுரம் பகுதியில் பெங்களூரைச் சேர்ந்த ராஜன் என்பவருக்கு சொந்தமான தோட்டம் அமைந்துள்ளது. இந்த தோட்டத்தில் சுப்பையா, சக்தி, அய்யனடைப்பைச் சேர்ந்த முனியசாமி ஆகிய 3 பேரும் கரிமூட்டம் போடும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

கரி தயாரிக்க எரியும் நெருப்பில் தண்ணீர் ஊற்றுவதற்காக தோட்டத்தில் உள்ள கிணற்றிலிருந்து சுப்பையா தண்ணீர் எடுக்கச் சென்றுள்ளார்.

அப்போது எதிர்பாராதவிதமாக அவர் கிணற்றிற்குள் தவறி விழுந்தார். அவர் கிணற்றில் விழுந்ததை அடுத்து, சக தொழிலாளர்கள் அவரை மீட்க முயன்றும் பலனளிக்கவில்லை.

தண்ணீரில் மூழ்கிய சுப்பையா கிணற்றிலேயே உயிரிழந்தார்.

இந்த சம்பவம் குறித்து அளிக்கப்பட்ட புகாரின் பேரில், சிப்காட் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# 'கூட்டணி ஆட்சிக்கு தயார் என்று திமுக அறிவித்திருந்தால்...' திருமாவளவன் பேட்டி



சென்னை, ஜூலை 13

விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல் திருமாவளவன் இன்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசியதாவது;

"கூட்டணி ஆட்சிக்கு திமுக தயார் என்று அறிவித்திருந்தால், கூட்டணி கட்சிகளின் உணர்வுகளை மதித்து அவர்கள் விரும்பிய எண்ணிக்கையை ஒரளவிற்காவது திருப்திகரமான முறையிலேயே தந்திருந்தால், விரும்பிய தொகுதிகளை தந்திருந்தால் இவ்வளவு பெரிய பின்னடைவை சந்திருக்க வாய்ப்பு இல்லை.

அதைவிட இந்த கட்சிகள் அவ்வளவு வேகமாக வெளியேற வாய்ப்பு இல்லை. இந்த கோணத்தில் யாரும் சிந்திக்கல. துரோகம் பண்ணிட்டாங்க எனச் சொல்றாங்க., துரோகம் பண்ண என்ன இருக்கு. நாளைக்கு கூட நாம் அமைச்சர் பதவியில் இருந்து வெளியேற முடியும். பதவியை தக்க வைத்துக் கொள்ள வேண்டுமென்றால், அதை தக்கவைப்பதற்கான அணுகுமுறையைத் தானே எடுப்பார்கள். த.வெ.க.வுக்கு ஆதரவு, அமைச்சர் பதவி. அப்படி என்றால் த.வெ.க. அரசை புகழ்ந்துபாடிக்கொண்டே இருப்போம். இப்படித் தானே சராசரி மனிதன் முடிவு எடுக்கனும்.

அதைத் தாண்டி பாஜகவுக்கு எதிராக எல்லா கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும் என்ற பார்வையை திருமாவளவன் முன் வைக்கிறான் என்றால், இந்த பார்வையை நீங்கள் பாராட்ட வேண்டாமா? வரவேற்க வேண்டாமா? ஒரு அட்டாச்சுடு இல்லாமல் இவன் ஏன் இப்படி பேசுகிறான் என்றால்,

திமுகவில் மீண்டும் ஒட்டிக்கொள்ள நினைக்கிறான் என்கிறார்கள். திமுகவுடன் ஒட்டிக்கொள்ளதேவை என்ன வந்தது?. அர்த்தம் இல்லாத விமர்சனம் அது."

இவ்வாறு அவர் பேசினார்.

# அமோனியா வாயு கசிவு ஏற்பட்ட தொழிற்சாலையில் மரங்களை அகற்றும் பணி தீவிரம்



திருவள்ளூர், ஜூலை 13

திருவள்ளூர் மாவட்டம் கன்னிகைப்பேரில் செயல்பட்டு வந்த கடல் உணவுப்பொருட்கள் ஏற்றுமதி தொழிற்சாலையில் கடந்த மாதம் 21ந்தேதி அமோனியா வாயு கசிவு ஏற்பட்டது. இதில் 18 வடமாநில பெண் தொழிலாளர்கள் உயிரிழந்தனர். பலர்பாதிக்கப்பட்டனர்.

விபத்துக்கு பிறகு, தொழிற்சாலையில் இருந்த அமோனியா வாயு அகற்றும் பணி 4 நாட்கள் நடைபெற்றது. பின்னர், மாவட்ட நிர்வாகத்தின் உத்தரவின்பேரில் அலுவலகம், குடோன், தளவாட அறை, குடியிருப்பு உள்ளிட்ட 5 பகுதிகளுக்கு அதிகாரிகள் 'சீல்' வைத்தனர்.

தொழிற்சாலையில் கழிவுநீர் அகற்றும் பணியுடன், வளாகத்தில் உள்ள சுமார் 20 மரங்களை வெட்டி அகற்றும் பணியும் நடைபெற்றது. இதற்காக அங்கு மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்டது. இந்த பணிகள் இன்று மாலை அல்லது நாளைக்குள் நிறைவடையும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதையடுத்துதொழிற்சாலையின் பிரதான நுழைவாயிலுக்கும் அதிகாரப்பூர்வமாக 'சீல்' வைக்கப்பட உள்ளது.

# மெரினா கடலில் ஆட்டிசம் குறைபாடுடைய 39 குழந்தைகள் 2 கி.மீ. நீந்தி சாதனை



சென்னை, ஜூலை 13

சென்னை மெரினா கடற்கரையில், ஆட்டிசம் குறைபாடுடைய 39 குழந்தைகள் ஒன்றிணைந்து 2 கிலோ மீட்டர் தூரத்தை வெற்றிகரமாக நீந்தி சாதனை படைத்தனர்.

சென்னை மெரினா கடற்கரையில், ஆட்டிசம் குறைபாடுடைய குழந்தைகளின் திறனையும், தன்னம்பிக்கையும், மன உறுதியையும் உலகிற்கு எடுத்துக் காட்டும் வகையில் தனியார் அறக்கட்டளை சார்பில் நேற்று கடல் நீச்சல் நிகழ்வு நடைபெற்றது. மெரினா கலங்கரை விளக்கத்தில் இருந்து கண்ணகி சிலை வரை குழந்தைகள் நீந்தி சென்றனர். அப்போது, ஆட்டிசம் குறித்தும், கடல்களையும் சுற்றுச்சூழலையும் பாதுகாப்பதன் அவசியம் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

# சென்னை: கடலில் குளித்தபோது ராட்சத அலையில் சிக்கி பிளஸ்1 மாணவர் பலி



சென்னை, ஜூலை 13

சென்னை எண்ணூரில் கடலில் குளித்தபோது ராட்சத அலையில் சிக்கி பிளஸ்1 மாணவர் பலியானார். அவரது நண்பருக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

சென்னை எண்ணூரை அடுத்த எர்ணாவூர் பெரிய காசி கோவில் குப்பம் முதல் தெருவைச் சேர்ந்த தங்கராஜின் மகன் கவுதம் (வயது 15). இவர், அங்குள்ள பள்ளியில் பிளஸ்1 படித்து வந்தார். அதே பகுதியைச் சேர்ந்த அவரது நண்பர் ஜோதிஷ்(15). இவர் 10ம் வகுப்பு படித்து வருகிறார்.

நேற்று மாலை நண்பர்கள் இருவரும் எண்ணூர் பெரியக்குப்பம் கடற்கரை பகுதியில் கடலில் குளித்து விளையாடிக்கொண்டிருந்தனர். அப்போது திடீரென ஏற்பட்ட ராட்சத அலையில் சிக்கி 2 பேரும் கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டனர்.

இதைப் பார்த்த அங்கிருந்த மீனவர்கள், உடனடியாக கடலுக்குள் சென்று, அலையில் சிக்கித் தத்தளித்த 2 பேரையும் மீட்டு, 108 ஆம்புலன்ஸ் மூலம் சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு டாக்டர்கள் பரிசோதித்தபோது,

கவுதம் வரும் வழியிலேயே உயிரிழந்துவிட்டதாக தெரிவித்தனர். அவரது உடல் பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டது. மற்றொரு மாணவர் ஜோதிசுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதுகுறித்து எண்ணூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# அரசு அலுவலகங்களில் ஊழல் தடுப்பு சோதனை: ரூ.22.33 லட்சம் பறிமுதல்



சென்னை, ஜூலை 13

லஞ்ச ஒழிப்புத்துறை இயக்குனர் அருண் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

தமிழகத்தில் ஜூலை 4ம் தேதி முதல், 10ம் தேதி வரை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டது. அதன்படி, கிருஷ்ணகிரி, திருவள்ளூர், தேனி, கன்னியாகுமரி, திண்டுக்கல், தஞ்சாவூர், ராணிப்பேட்டை ஆகிய மாவட்டங்களில், 11 அரசு அலுவலகங்களில் சோதனை நடத்தப்பட்டது. அதில் கணக்கில் வராத, 12.46 லட்சம் ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டது. அதேபோல், மாநில எல்லைகளில் நடத்திய சோதனையில், 9.87 லட்சம் ரூபாய் என, மொத்தம், 22.33 லட்சம் ரூபாய் கைப்பற்றப்பட்டது.

மேலும், 7ம் தேதி விழுப்புரம் மாவட்டத்தில், கட்டட வரைபட அனுமதிக்கு, 15,000 ரூபாய் லஞ்சம் பெற்ற, இளநிலை உதவியாளர் பாலமுருகன் கைது செய்யப்பட்டார். அதே நாளில், திருப்பூர் மாவட்டத்தில் பட்டா மாற்றம் செய்ய, 5,000 ரூபாய் லஞ்சம் பெற்ற கிராம நிர்வாக அலுவலர் அப்துல் ரகுமான் கைது செய்யப்பட்டார். சென்னை வேளச்சேரி காவலர் அழகுராஜா இரு சக்கர வாகனத்தின் உரிமத்தை திருப்பி தர, 1,000 ரூபாய் லஞ்சம் பெற்ற வழக்கில், 9ம் தேதி கைது செய்யப்பட்டார்.

அதே நாளில், சிவகங்கை மாவட்டத்தில், திருமணம் செய்துவைக்க, திருப்புவனம் போலீஸ் எஸ்.ஐ., 3,000 ரூபாய் லஞ்சம் பெற்றபோது கைது செய்யப்பட்டார். மேலும், அதே மாவட்டத்தில், பட்டா பெயர் மாற்ற 3,000 ரூபாய் லஞ்சம் பெற்ற, கிராம உதவியாளர் கணேசன் கைது செய்யப்பட்டார்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில், பட்டா பெயர் மாற்றம் செய்ய, 2,500 ரூபாய் லஞ்சம் பெற்ற தாலுகா அலுவலக உதவியாளர் ஆரோன், 10ம் தேதி கைது செய்யப்பட்டார். அதே நாளில் தென்காசி மாவட்டத்தில், பட்டா பெயர் மாற்றம் செய்ய நில அளவையர் சங்கர், 10,000 ரூபாய் லஞ்சம் பெற்ற போது சிக்கினார்.

மேலும், லஞ்சம் பெற்ற தாசில்தார் ஆதிபகவான், ஓட்டுனர் கந்தசாமி ஆகியோருக்கு, மூன்று ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் 1,000 ரூபாய் அபராதம் விதித்து, விழுப்புரம் மாவட்ட ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மருத்துவ கல்லூரியில் 'சீட்' வாங்கி தருவதாக ரூ.5.8 லட்சம் மோசடி: வாலிபர் கைது

சென்னை, ஜூலை 13

சென்னையில் ஒரு பெண்ணின் மகனுக்கு மருத்துவ கல்லூரியில் சீட் வாங்கி தருவதாக கூறி ரூ.5.8 லட்சம் மோசடி செய்த வாலிபரை போலீசார் கைது செய்தனர்.

சென்னை பெரவள்ளூர் பேப்பர் மில்ஸ் சாலையைச் சேர்ந்தவர் சுகன்யா லட்சுமி (வயது 37). இவர், நண்பர் மூலம் அறிமுகமான சென்னையை அடுத்த கரையான்சாவடியைச் சேர்ந்த சக்தி(27) என்பவரிடம், தனது மகனுக்கு தனியார் கல்லூரியில் மருத்துவ படிப்புக்கான 'சீட்' வாங்கித் தருவதற்காக ரூ.5 லட்சத்து 80 ஆயிரம் கொடுத்துள்ளார்.

ஆனால், பணத்தை வாங்கிய சக்தி, சொன்னபடி மருத்துவ கல்லூரியில் 'சீட்' வாங்கி தரவில்லை. மேலும் சுகன்யா லட்சுமியிடம் வாங்கிய பணத்தையும் திருப்பி தராமல் ஏமாற்றி வந்ததாக கூறப்படுகிறது. இந்த பண மோசடி குறித்து நடவடிக்கை எடுக்கக் கோரி சுகன்யா லட்சுமி, திரு.வி.க. நகர் போலீசில் புகார் அளித்தார். அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். விசாரணையில், மருத்துவ கல்லூரியில் 'சீட்' வாங்கி தருவதாக சக்தி மோசடி செய்தது உறுதியானது. இதையடுத்து சக்தியை போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர். மேலும் இதுபற்றி போலீசார் விசாரித்து வருகின்றனர்.

தினகனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

13.07.2026

# தனுஷ்கோடி தெற்கு கடற்கரையில் கல் சுவர் அமைக்கும் பணி தீவிரம்



ராமேசுவரம், ஜூலை 13

கடல் சீற்றத்தால் சாலை சேதம் அடைவதை தடுக்கும் வகையில் தனுஷ்கோடி தெற்கு கடற்கரையில் கல்சுவர் கட்டும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.

ராமேசுவரம் அருகே புயலால் அழிந்து போன தனுஷ்கோடி கடல் பகுதி உள்ளது. தனுஷ்கோடி வரையிலும் மத்திய அரசின் சார்பில் தேசிய நெடுஞ்சாலைத்துறை மூலம் புதிதாக சாலை அமைக்கப்பட்ட பின்னர் கடந்த 9 ஆண்டுகளில் ராமேசுவரம் மற்றும் தனுஷ்கோடிக்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையும் பல மடங்கு அதிகரித்துள்ளது. முகுந்தராயசத்திரம் கடற்கரையில் இருந்து 10 கிலோமீட்டர் தூரம் அரிச்சல் முனை வரையிலும் அமைக்கப்பட்டுள்ள சாலையின் பாதுகாப்பு கருதியும், கடல் சீற்றம் நீரோட்ட வேகத்தால் சாலை சேதமாவதை தடுக்கும் வகையிலும் சாலையின் இருபுறங்களிலும் கடற்கரை பகுதியில் பாறாங்கற்களை கொண்டு தடுப்பு சுவர் கட்டப்பட்டுள்ளது.

தனுஷ்கோடி கடல் பகுதியில் கடந்த ஆண்டு ஏற்பட்ட கடல் சீற்றம் மற் றும் நீரோட்ட வேகத்தால் தெற்கு கடற்கரை பகுதியில் பல இடங்களில் தடுப்பு சுவர் பெயர்ந்து கடலில் இழுத்து செல்லப்பட்டது. இதனிடையே தனுஷ்கோடி கம்பிப்பாடுக்கும், அரிச்சல் முனைக்கும் இடைப்பட்ட தெற்கு கடற்கரை பகுதியில் தேசிய நெடுஞ்சாலைத்துறை மூலம் சாலையின் பாதுகாப்பு கருதி கூடுதலாக தடுப்பு சுவர்களை கட்டி, கடற்கரையை பலப்படுத்தும் பணி நடந்து வருகிறது.

இதற்காக அருப்புக்கோட்டை பகுதியில் இருந்து கனரக லாரிகள் மூலம் பாறாங்கற்கள் தனுஷ்கோடி பகுதிக்கு கொண்டுவரப்பட்டு அரிச்சல் முனை அருகே தெற்கு கடற்கரை பகுதியில் கொட்டப்பட்டுள்ளன.

இவை பொக்லைன் எந்திரம் மூலம் வரிசையாக அடுக்கி, கற்கள் சரி வதை தடுக்கும் வகையில் இரும்பு கம்பியால் கட்டி பாக்ஸ் போன்று தடுப்பு சுவர் கட்டப்பட்டு வருகிறது. இன்னும் சில மாதங்களில் இந்த தடுப்பு சுவர் கட்டும் பணி முழுமையாக முடிவடையும் என எதிர்பார்க்கப் படுகிறது.

அரிச்சல் முனை சாலை சுற்றி பாக்ஸ் வடிவில் தடுப்பு சுவர் கட்டி முடிக்கப்பட்டுள்ளதால் அங்கு வரக்கூடிய சுற்றுலா பயணிகள் இந்த தடுப்பு சுவரில் நின்று கடல் மற்றும் கடற்கரை அழகை பார்த்து ரசித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மதுபானங்களுக்கு ரூ.10 கூடுதலாக செஸ் வரி வசூலிக்க பரிசீலனை: ஐகோர்ட்டில் டாஸ்மாக் நிர்வாகம் தகவல்

சென்னை, ஜூலை 13

சுற்றுச்சூழல்மற்றும்வனவிலங்குகளுக்கு ஏற்படும் பாதிப்பை தடுக்கும் விதமாக காலி மதுபான பாட்டில்கள் திரும்பப் பெறப்பட்டு வருகிறது. விற்பனை செய்யும் போது பாட்டிலுக்கு ரூ.10 கூடுதலாக வசூலித்து, காலி பாட்டிலை திருப்பித்தரும்போது அந்த பணத்தை திருப்பிக் கொடுக்கும் திட்டத்தை ஐகோர்ட்டு உத்தரவுப்படி தமிழகம் முழுவதும் டாஸ்மாக் நிர்வாகம் அமல்படுத்தி வருகிறது.

இந்நிலையில், இது தொடர்பான வழக்கு நீதிபதிகள் என்.சதீஷ்குமார், டி.பரத சக்ரவர்த்தி ஆகியோர் அடங்கிய அமர்வில் மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழக அரசு தரப்பில் காலிமது பாட்டில்களை திரும்ப வாங்கும் திட்டத்தை மாற்றியமைக்க உள்ளதாக அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

அதில் கூறியிருப்பதாவது, பாட்டிலுக்கு ரூ. 10 கூடுதலாக வசூலிப்பதற்கு பதிலாக அந்த தொகையை மதுபான விற்பனை விலையுடன் சேர்த்து விற்க திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி, காலி மது பாட்டில்களை சேகரித்து திரும்பப் பெறுவது. கொண்டு செல்வது. மறு சுழற்சி செய் வது என அனைத்து பொறுப்புகளையும் சம்பந்தப்பட்ட மதுபான உற்பத்தி நிறுவனங்கள் வசமே ஒப்படைப்பது என முடிவு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக, உரிய சட்ட திருத்தங்கள் மேற்கொள்ள மதுவிலக்குத் துறை ஆணையருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மதுபானங்களின் அதிக பட்ச விற்பனை விலையுடன் கூடுதலாக ரூ.10ஐ செஸ் வரியாக விதிக்க அரசுக்கு வணிக வரித்துறை ஆணையர் கருத்துரு அனுப்பியுள்ளார். இதுதொடர்பாக மதிப்பு கூட்டுவரியின் சட்ட விதிகளில் திருத்தங்கள் மேற்கொள்ள அரசு பரிசீலித்து வருகிறது. இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அதையடுத்து நீதிபதிகள், வழக்கு விசாரணையை 6 வாரங்களுக்கு தள்ளிவைத்து. அடுத்தகட்டநடவடிக்கைகுறித்துஅறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டனர்.

# இறந்தவர்கள் ஆன்மாவை திருப்தி செய்கிறோம் என பொருட்களை ஆற்றில் வீசுவதா? மதுரை ஐகோர்ட்டு நீதிபதிகள் அதிருப்தி



மதுரை, ஜூலை 13

இறந்தவர்கள் ஆன்மாவை திருப்தி செய்கிறோம் என பொருட்களை ஆற்றில் வீசுவதா? எனக்கூறி அதிருப்தி தெரிவித்த மதுரை ஐகோர்ட்டு நீதிபதிகள். பல்வேறு உத்தரவுகளை பிறப்பிக்க இருப்பதாகவும் அதிரடியாக அறிவித்தனர். நெல்லை மாவட்டத்தை சேர்ந்த சிவானுபாண்டியன், மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில், நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் தாலுகா விக்கிரமசிங்கபுரம் பகுதியில் உள்ள ஆனந்த விலாஸ் மண்டபத்தில் இருந்து எங்களை வெளியேறுமாறு நீர்வளத்துறை அதிகாரிகள் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என கூறியிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் ஜி.ஆர். சுவாமிநாதன், புகழேந்தி ஆகியோர் பிறப்பித்த உத்தரவு வருமாறு:\ இந்த வழக்கு விசாரணையின்போது. பாபநாசம் முதல் தாமிரபரணி ஆற்றின் படித்துறைகளில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் தங்கள் முன்னோர்களுக்கான சடங்குகளை செய்வதற்காக கூடுகிறார்கள் என்று தாமிரபரணி வடிநில கோட்ட உதவி செயற்பொறியாளர் சார்பில் தெரிவிக்கப்பட்டது. இந்த சடங்குகளின்போது. ஆடைகள், துண்டுகள், செருப்புகள், இறந்தவர்களின் பொருட்களை ஆற்றில் வீசும் வழக்கம் உள்ளது. தாமிரபரணியில் டன் கணக்கில் வீசப்பட்ட ஆடைகள் அகற்றப்பட்டுள்ளது. தாமிரபரணி ஆறு 2 வகையான ஆமைகளின் வாழ்விடமாக உள்ளது. இவற்றின் சராசரி ஆயுட்காலம் நூறு ஆண்டுகளுக்கு குறையாது. ஆனால், ஆமைகள் ஆற்றில் வீசப்பட்ட ஆடைகளில் சிக்கி இறக்கின்றன. புகைப்படங்களின் சட்டங்களைக்கூட ஆற்றில் வீசுவதால் கண்ணாடி உடைந்து நீர்வாழ் உயிரினங்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது.

இதுசம்பந்தமாக மாவட்ட நிர்வாகம் போர்க்கால அடிப்படையில் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். மாசுபடுவதற்கு அனுமதிக்கக்கூடாது. மதத்தின் பெயரால்கூட நீர்நிலையை மாசுபடுத்த யாருக்கும் உரிமை இல்லை என்பதை சட்டம் உறுதிப்படுத்துகிறது. நீர்நிலையை அழித்து வருவதால், நாங்கள் இதில் தலையிட வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். இறந்தவர்களின் ஆன்மாக்களை திருப்திப்படுத்துகிறோம் என பொருட்களை ஆற்றில் வீசுவதா? இந்த பழக்கத்தில் இருந்து மக்களை விடுவிக்க வேண்டும்.

சுற்றுச்சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தாமலும், மற்றவர்களின் உரிமைகளை மீறாமலும் ஆன்மிகத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் தங்களுக்கு பயனளிக்கும் செயல்களை செய்யலாம். ஆனால் இறந்தவர்களுக்கு சடங்குகளை செய்வதற்காக கோடிக்கணக்கான மக்களின் தேவையை பூர்த்தி செய்யும் வற்றாத ஜீவநதியாக திகழும் தாமிரபரணி ஆறு மாசுபடுவதற்கு அனுமதிக்கக்கூடாது.

இந்த வழக்கை வருகிற 16ந்தேதிக்கு ஒத்திவைக்கிறோம். அன்றையதினம் பல்வேறு உத்தரவுகளை பிறப்பிப்போம். இவ்வாறு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# இன்றைய ராசி பலன்கள் (13.07.2026)




உங்களது அழகான தோற்றமும் பேச்சும் மற்றவர்களை எளிதில் ஈர்க்கும். பணியிடத்தில் நீங்கள் செய்யும் கடின உழைப்பு எதிர்காலத்தில் பெரிய பலனைத் தரும். தேவையற்ற பண விரயங்களைத் தவிர்க்க இன்று செலவுகளில் கொஞ்சம் கட்டுப்பாட்டுடன் இருப்பது நல்லது.




நீண்ட நாட்களாகத் தள்ளிப்போன காரியங்கள் இன்று சாதகமாக முடியும். வியாபாரத்தில் எதிர்பாராத லாபம் அல்லது புதிய வாய்ப்புகள் கிடைக்கக்கூடும். பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடித்தால் குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழலைத் தக்க வைக்கலாம்.




வேலைப்பளு சற்று அதிகமாகத் தோன்றினாலும், உங்கள் உழைப்பிற்கேற்ற நற்பெயரும் அங்கீகாரமும் கிடைக்கும். மாணவர்களுக்குக் கல்வியில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். புதிய முதலீடுகளைத் திட்டமிடும்போது ஒருமுறைக்கு இருமுறை யோசித்து முடிவெடுக்கவும்.




குடும்பத்தில் மகிழ்ச்சியான மற்றும் சுப நிகழ்ச்சிகள் பற்றிய பேச்சுகள் வரலாம். வீடு, நிலம் சார்ந்த சொத்து விவகாரங்களில் சாதகமான திருப்புமுனை ஏற்படும். மன அமைதியும் தைரியமும் கூடும் நாளாக அமையும்.




உத்தியோகத்தில் இருப்பவர்களுக்குப் புதிய பொறுப்புகள் அல்லது பதவி உயர்வுக்கான அறிகுறிகள் தென்படும். நண்பர்கள் மற்றும் சக ஊழியர்களின் ஆதரவு உங்களுக்குப் பக்கபலமாக இருக்கும். வாகனப் பயணங்களின் போது கவனமாக இருப்பது அவசியம்.




பொருளாதார நிலை உயரும், பணவரவு திருப்திகரமாக இருக்கும். தொழில் மற்றும் வியாபாரத்தில் நீங்கள் போடும் புதிய திட்டங்கள் வெற்றியைத் தரும். உறவினர்களுடனான கருத்து வேறுபாடுகள் நீங்கி ஒற்றுமை பலப்படும்.




இன்று நீங்கள் எதையும் சாதிக்கும் துணிச்சலோடு செயல்படுவீர்கள். பழைய பாக்கிகளை வசூல் செய்வதில் வேகம் காட்டுவீர்கள், அதற்குரிய பலனும் கிடைக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள்.




சந்திராஷ்டமம் இன்று உங்கள் ராசிக்கு சந்திராஷ்டமம் இருப்பதால் மிகவும் கவனமாக இருக்க வேண்டிய நாள். புதிய தொழில் முதலீடுகள், முக்கிய ஒப்பந்தங்கள் மற்றும் நீண்ட தூரப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. மற்றவர்களிடம் பேசும்போது தேவையற்ற வாக்குவாதங்களை எக்காரணம் கொண்டும் வளர்க்க வேண்டாம்.




உங்களது முயற்சிகளுக்கு இருந்த தடைகள் அனைத்தும் விலகும். கடன் தொல்லைகள் குறைந்து நிம்மதி ஏற்படும். குடும்ப உறுப்பினர்களுடன் இருந்த மனஸ்தாபங்கள் நீங்கி, இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும்.




குடும்பத்தில் உள்ள பெரியவர்களின் ஆதரவும் ஆசியும் உங்களுக்குக் கிடைக்கும். பணியிடத்தில் சவாலான வேலைகளையும் உங்கள் சமயோசித புத்தியால் எளிதாக முடிப்பீர்கள். புதிய விஷயங்களைக் கற்றுக்கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.




தொழிலில் நல்ல முன்னேற்றமும், கீழ்நிலை ஊழியர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும். அரசாங்க வழியில் எதிர்பார்த்த உதவிகள் சாதகமாக முடியும். ஆரோக்கியத்தில் சிறு கவனம் செலுத்துவது நல்லது.




வாக்கு வன்மையால் பல காரியங்களை இன்று சாதிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களோடு இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் நீங்கும். மாணவர்களுக்கு உயர்கல்வி கற்பதில் கூடுதல் கவனம் தேவைப்படும்.

# நயினார் நாகேந்திரனுக்கு ரூ.25 ஆயிரம் கோடி பரிசு: தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்க தலைவர் பேச்சு

சென்னை, ஜூலை 13

தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்க நிறுவனர் ஈசன் முருகசாமி நிருபர்களிடம் கூறியதாவது:

கரூர் மாவட்டத்தில் இனாம் ஒழிப்பு சட்டத்தின்கீழ், 3,085ஏக்கர்நிலங்களுக்கு பத்திரப்பதிவு தடை விதித்திருப்பதை நீக்கி அறநிலையத்துறை உத்தரவு பிறப்பித்து உள்ளது. இதற்கு எதிராக ரமேஷ் என்பவர் உண்மைகளை மறைத்து, இனாம் நிலங்களை கோவில் நிலம் என்று தெரிவித்ததோடு, ரூ.25 ஆயிரம் கோடி மதிப்புள்ள சொத்துகள் என கற்பனையான மதிப்பை குறிப்பிட்டு ஆக்கிரமிப்பாளர்களுக்கு இந்த நிலங்களை தமிழ்நாடு அரசு தாரை வார்த்து இருப்பதாக தவறாக ஒரு பதிவு செய்துள்ளார்.

அதன் உண்மைத்தன்மை குறித்து ஆராயாமல், பா. ஜனதா மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் அதை வழிமொழிந்து அறிக்கை வெளியிட்டிருப்பது தமிழ்நாட்டில் இனாம் நில பிரச்சினையில் பாதிக்கப்பட்ட 30 லட்சம் மக்கள் இடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. எனவே அவரின் தவறான அறிக்கையை உடனடியாக திரும்பப் பெற வேண்டும்.

இனாம் நில விவசாயிகள் பொதுமக்களின் நில உரிமைக்கு ஆதரவு கொடுக்க வேண்டும். அப்படி இனாம் நிலங்களை கோவில் நிலம் என்று நிரூபித்தால் நயினார் நாகேந்திரனுக்கு ரூ.25 ஆயிரம் கோடி பரிசு வழங்க தயாராக உள்ளோம். இவ்வாறு அவர் தெரிவித்தார். அப்போது அவருடன், தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்க தலைவர் சண்முகசுந்தரம், திருப்பூர் மாவட்ட தலைவர் ரமேஷ், பல்லடம் ஒன்றிய செயலாளர்கள் செல்வராஜ், நடராஜ், பல்லடம் நகர செயலாளர் கார்த்திக் மற்றும் நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# நட்சத்திர வீரரின் பெரிய தவறால்... அரையிறுதி வாய்ப்பை இழந்த நார்வே: வைரலான வீடியோ




நார்வே நட்சத்திர வீரரின் பெரிய தவறால் அந்த அணி அரையிறுதி வாய்ப்பை இழந்த சம்பவம் ஏற்பட்டு உள்ளது.

சர்வதேச கால்பந்து கூட்டமைப்பான பிபா சார்பில் நடத்தப்பட்டு வரும் உலகக்கோப்பை கால்பந்து போட்டி தொடரில் லீக் சுற்று, 2வது சுற்று (நாக்அவுட் சுற்றுகள்), 3வது சுற்று போட்டிகள் முடிந்து, காலிறுதி போட்டிகள் நடந்து வருகின்றன. இதில், வெற்றி பெறும் அணி அரையிறுதிக்கு தகுதி பெறும்.


அந்த வகையில், அதிகாலை 2.30 மணிக்கு அமெரிக்காவின் மியாமி மைதானத்தில் நடந்த காலிறுதி போட்டி ஒன்றில் நார்வே மற்றும் இங்கிலாந்து அணிகள் விளையாடின. பரபரப்பாக நடந்த இந்த போட்டியில், நார்வே முன்கள வீரரான அலெக்சாண்டர் சொர்லோத், பந்து தனக்கு வந்தபோது, அதனை மற்றொரு நட்சத்திர வீரரான எர்லிங் ஹாலந்துக்கு 'பாஸ்' செய்ய தவறினார். பந்து 'பாஸ்' செய்யப்பட்டால் ஸ்கொயரிங் அடிப்படையில் கோல் அடிக்கப்பட்டு இருக்கும்.

அப்போது இங்கிலாந்து தரப்பில் தடுப்பு ஆட்டக்காரரான ஜான் ஸ்டோன்ஸ் ஒருவரே இருந்தபோதும், அதனை பயன்படுத்தி ஹாலந்துக்கு 'பாஸ்' செய்து, எளிதில் கோல் விழுவதற்கான வாய்ப்பை சொர்லோத் தவற விட்டார். அதற்கு பதிலாக, அவரே கோல் போடும் நோக்கில் தொடர்ந்து முன்னேறினார். அப்போது, ஹாலந்து தன்னிடம் 'பாஸ்' செய்யும்படி சைகை காட்டியும், அதனை மதிக்காமல் சொர்லோத் செயல்பட்டது ஆட்டத்தின் போக்கை மாற்றி விட்டது.

சற்று நேரத்தில் அவரை இங்கிலாந்தின் 5 வீரர்கள் சூழ்ந்து கொண்டனர். இதனால், பந்து தடுக்கப்பட்டு, கோல் கீப்பரின் கைக்கு போனது. கோல் வாய்ப்பும் நழுவியது. அதுவரை நார்வே 10 என முன்னிலையில் இருந்தது. போட்டியில் அந்த கோல் அடிக்கப்பட்டால், 2 கோல் முன்னிலையுடன் நார்வே எளிதில் வெற்றி பெறும் சூழல் இருந்தது.

ஆனால், தானே கோல் அடித்து பெருமை பெற வேண்டும் என்ற சொர்லோத்தின் சுயநல முடிவால், நார்வே அணி அரையிறுதி வாய்ப்பையே இழக்கும் சூழல் ஏற்பட்டது என ரசிகர்கள் ஆதங்கம் தெரிவித்து வருகின்றனர். களத்திலேயே, ஏமாற்றத்தின் வெளிப்பாட்டை எர்லிங்கிடம் காண முடிந்தது. இந்த வீடியோ வைரலாகி வருகிறது. இது உலகக்கோப்பையில் நடந்த மிகப்பெரிய தவறு என பலரும் விமர்சித்து வருகின்றனர்.

# நியூசிலாந்து அணிக்கு எதிரான ஒருநாள் போட்டி: வெண்ட் இண்டீஸ் அணி வெற்றி




நியூசிலாந்து கிரிக்கெட் அணி, வெஸ்ட் இண்டீசுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு அந்நாட்டு அணிக்கு எதிராக 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் ஒருநாள் போட்டி கயானா மைதானத்தில் இன்று நடைபெற்றது.

இதில் டாஸ் வென்ற வெஸ்ட் இண்டீஸ் அணி பந்துவீச்சை தேர்வுசெய்தது. அதன்படி நியூசிலாந்து அணி முதலில் பேட்டிங் செய்து 49.5 ஓவர்களில் 267 ரன்னுக்கு ஆல் அவுட் ஆனது. டேரில் மிட்சேல் அதிகபட்சமாக 65 ரன்கள் எடுத்தார். அல்சாரி ஜோசப் அதிகபட்சமாக 4 விக்கெட்டுகளை கைப்பற்றினார்,

இதையடுத்து 268 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் வெஸ்ட் இண்டீஸ் அணி,, 48.5 ஓவர்களில் 3 விக்கெட் மட்டும் இழந்து இலக்கை கடந்தது. இதன் மூலம் அந்த அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. காட்டி 95 ரன்களும், ஷாய் ஹோப் 87 ரன்களும் எடுத்து அணியின் வெற்றிக்கு வித்திட்டனர். இந்த வெற்றியின் மூலம் வெஸ்ட் இண்டீஸ் அணி, 5 போட்டிகள் கொண்ட தொடரில் 10 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

# ரூ.1.80 கோடி பண மோசடி!.. நடிகர் ஆர்யா மீது ஐதராபாத் போலீசார் வழக்குப்பதிவு



ஐதராபாத்தைச் சேர்ந்த தனியார் திரைப்பட உபகரணங்கள் வாடகைக்கு வழங்கும் நிறுவனம் அளித்துள்ள புகாரில், 'அனந்தன் காடு' திரைப்பட படப்பிடிப்பிற்காக உயர்தர கேமராக்கள், லென்ஸ்கள், லைட்டிங் சாதனங்கள், கிரிப் உபகரணங்கள்மற்றும்பல்வேறுதொழில்நுட்பஉபகரணங்கள் வழங்கப்பட்டதாகவும், அவற்றுக்கான வாடகை மற்றும் சேவைக் கட்டணமாக ரூ.1.80 கோடி நிலுவையில் இருந்தும், பலமுறைகோரிக்கைவிடுத்தும்பணம்செலுத்தப்படவில்லை என்றும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக பல கட்டங்களில் நேரடி பேச்சுவார்த்தைகள், சட்ட நோட்டீஸ்கள் மற்றும் சமரச முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், இருப்பினும் தொகை கிடைக்காததால் காவல்துறையை அணுக வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் அந்த நிறுவனம் தனது புகாரில் தெரிவித்துள்ளது.

இந்தபுகாரைத்தொடர்ந்துமுதற்கட்டவிசாரணைமேற்கொண்டஜூபிலிஹில்ஸ்போலீசார், புகாரில்குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்து விரிவான விசாரணையைத் தொடங்கியுள்ளனர். புகாருடன் இணைக்கப்பட்டுள்ள ஒப்பந்த ஆவணங்கள், விலைப்பட்டியல்கள், வங்கி பரிவர்த்தனை விவரங்கள், மின்னஞ்சல் தொடர்புகள், வாட்ஸ்அப் உரையாடல்கள் உள்ளிட்ட ஆதாரங்களை போலீசார் ஆய்வு செய்து வருவதாக கூறப்படுகிறது. மேலும், சம்பந்தப்பட்ட தனியார் நிறுவனத்தின் நிர்வாகிகள், தயாரிப்பு நிறுவன பிரதிநிதிகள், படக்குழுவினர் மற்றும் இந்த நிதி பரிவர்த்தனைகளுடன் தொடர்புடைய பிற நபர்களிடமும் விசாரணை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. தேவையெனில் நடிகர் ஆர்யாவிடமும் நேரில் விளக்கம் பெற போலீசார் சம்மன் அனுப்ப வாய்ப்புள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தனியார் திரைப்பட உபகரணங்கள் வாடகைக்கு வழங்கும் நிறுவனம் அளித்துள்ள புகாரில் நடிகர் ஆர்யா, தயாரிப்பாளர் வினோத், படத் தயாரிப்பு நிறுவனத்தின் பிரதிநிதி கிஷோர் மீது ஜூப்ளி ஹில்ஸ் காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரணையைத் தொடங்கியுள்ளனர்.

இந்த விவகாரத்தில் நடிகர் ஆர்யா தனிப்பட்ட முறையில் ஒப்பந்தத்தில் இருந்தாரா, அல்லது தயாரிப்பு நிறுவனம் மற்றும் மூன்றாம் தரப்பினருக்கிடையேயான வர்த்தக பரிவர்த்தனையா என்பது குறித்தும் போலீசார் அனைத்து கோணங்களிலும் விசாரணை நடத்தி வருவதாக கூறப்படுகிறது. குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரங்கள் உள்ளனவா, நிலுவைத் தொகை தொடர்பான வர்த்தகத் தகராறா அல்லது மோசடி நோக்கத்துடன் நடந்த செயலா என்பது விசாரணைக்குப் பிறகே தெளிவாகும் என்றும் போலீஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# ரூ 100 கோடி வசூலித்த சமந்தாவின் "மா இன்டி பங்காரம்"




சமந்தாவின்'மா இன்டி பங்காரம்' திரைப்படம் 22 நாட்களில் ரூ.100 கோடி வசூல் செய்துள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது.

தென்னிந்திய திரையுலகின் முன்னணி நடிகைகளில் ஒருவரான சமந்தா, மயோசிடிஸ் நோயால் பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து சில காலம் சினிமாவில் இருந்து விலகியிருந்தார். சிகிச்சைக்குப் பிறகு மீண்டு வந்துள்ள அவர், தற்போது மீண்டும் திரைப்படங்களில் நடிப்பதுடன் தயாரிப்பாளராகவும் கவனம் செலுத்தி வருகிறார்.

அந்த வகையில், சமந்தா தயாரித்து நடித்துள்ள புதிய திரைப்படமான 'மா இன்டி பங்காரம்' கடந்த மாதம் 19ம் தேதி உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியானது.

பி.வி. நந்தினி ரெட்டி இயக்கியுள்ள இந்தப் படத்தில் கவுதமி, மஞ்சுஷா, திகந்த் உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

இந்த படத்துக்கு இயக்குநரும், சமந்தாவின் கணவருமான ராஜ் நிடிமொரு கதை எழுதியுள்ளார். சந்தோஷ் நாராயணன் இசையமைத்துள்ளார். இந்தப் படம் தமிழில் 'எங்கள் தங்கம்' என்ற பெயரில் வெளியானது.

இந்தப் படத்தில் இதுவரை இல்லாத வகையில் அதிரடி கதாபாத்திரத்தில் சமந்தா நடித்துள்ளார்.

குறிப்பாகசண்டைக்காட்சிகளில்அவரதுநடிப்புரசிகர்களின்கவனத்தைஈர்த்துள்ளது. இதனால், நீண்டஇடைவெளிக்குப் பிறகு வெளியாகியுள்ள இந்தப் படம் சமந்தாவின் வெற்றிகரமான மீள்வருகை படமாக அமையும் என்ற எதிர்பார்ப்பு ரசிகர்களிடையே உருவாகியுள்ளது.

இந்த நிலையில், 'மா இன்டி பங்காரம்' திரைப்படம் 22 நாட்களில் ரூ.100 கோடி வசூல் செய்துள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது. இப்படம் முதல் நாளிலேயே சுமார் ரூ.13 கோடி வசூல் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது. இப்படம் விரைவில் ரூ.200 கோடி வசூலை ஈட்டி விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தெலுங்கு சினிமா வரலாற்றில் பெண் நாயகி படங்களில் அதிகம் வசூலித்து, முதலிடத்தைப் பிடித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.